# சுவிட்ஸர்லாந்தில் திருமண நடவடிக்கைகள் தொடர்பான தகவல் பத்திரம்: உரிகைளும் கடப்பாடுகளும்

சுவிட்ஸர்லாந்தில் திருமண நடவடிக்கைகளும் கடப்பாடுகளும் பற்றிய சுருக்கமான விபரம் கீழே தரப்படுகிறது. ஆயினும் இது தொடர்பாக எந்தவித சட்டரீதியான அழுத்தமும் இல்லை. நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்கள் தனித்த அதிகார வரம்பைக்கொண்டது.

இந்த தகவல் பத்திரத்தை விநியோகிக்கும் சுவிட்ஸர்லாந்தின் சிவில் பதிவுக் காரியாலயம், வெளிநாடுகளில் அமைந்துள்ள சுவிட்ஸர்லாந்து பிரதிநிதிகள், திருமணமான மற்றும் திருமணமாகாத நிலை தொடர்பான சமஷ்டிக் காரியாலயங்கள் இது தொடர்பிலான உதவி ஆலோசனை வழங்குவதற்கு உத்தியோகபூர்வமான பொறுப்பு அற்றவர்களாவர். எனவே இத் தகவல் பத்திரம் தொடர்பான ஆலோசனைகள் தேவைப்படின் தனிப்பட்ட முறையில் சட்ட ஆலோசனைகள் (தகவல் மையங்கள், சட்டத்தரணிகள், நொத்தாரிஸ் என்போரிடம்)உதவிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**சுவிட்ஸர்லாந்தில் திருமணத்திற்கான உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய சுருக்கமான விபரங்கள்**

சுவிட்ஸர்லாந்து சட்டத்தின் படி மிகவும் முக்கியமான உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் கிழே குறிப்பிடப்படுகின்றன. இவை குறித்தவொரு முறையிலோ அல்லது முழுமையாகவோ பட்டியல்படுத்தப்படவில்லை.

- **18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதையுடைய ஆண் அல்லது பெண்ணுக்கு மட்டுமே திருமணம் செய்ய முடியும்:** சுவிட்ஸர்லாந்தில் ஒரு பெண் அல்லது ஆண் திருமணம் செய்யக் கூடிய ஆகக்குறைந்த வயது 18 வருடங்கள் ஆகும். இரு தரப்பினரும் 18 வயது பூர்த்தி செய்ததும் திருமணம் செய்ய தகுதி உடையவராவர்.

- **அனைவரும் அவனது அல்லது அவளது துணையை சுதந்திரமாக தெரிவுசெய்ய முடியும்: எவரையும் திருமணம் செய்யுமாறு வற்புறுத்த முடியாது:** திருமணம் இருவரது சுய விருப்பத்திற்கு அமைய தீர்மானிக்கப்படுகிறது. எந்த ஒரு நபராலும் அவனது அல்லது அவளது விருப்பத்திற்கு மாறாக எவரும் திருமணம் செய்வதற்கு வற்புறுத்த முடியாது.

- **நம்பிக்கைக்கும் ஒத்துழைப்பிற்கும் அர்ப்பணித்தல்:** திருமண பந்தத்தின் நன்மை கருதி இரு வாழ்க்கைத் துணைகளும் செயற்பட வேண்டும். இருவரது ஆளுமைக்கும் ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல் வேண்டும். இரு வாழ்க்கைத் துணைகளும் ஒவ்வொருவரது விருப்புகளுக்கு எதிராக செயற்படக் கூடாது.

- **அனைத்து விடயங்களிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வழங்கப்படும்:** அனைத்து விடயங்களிலும் கணவனுக்கு உரித்தான அனைத்து உரிமைகளும் மனைவிக்கும் உண்டு. அவனது குரலைப் போன்றே அவளது குரலுக்கும் சமனான உரிமை உண்டு.

- **திருமணத்தின் அனைத்து இலக்குகளையும் அடைவதற்கான பொதுவான உடன்பாடு (வீட்டுக்கு வெளியே செய்யப்படும் வேலைகள், வீட்டு வேலைகள்):** இரு வாழ்க்கைத் துணைகளும் சமனானவர்கள் என்பதால் பால்நிலை சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட கடமைகள் பகிர்ந்துகொள்ளல் காணப்படமாட்டாது. வாழ்க்கைத் துணைகள் இருவரும் ஒருவருக்கொருவர் இணங்கிய வகையில் கடமைகளைப் பகிர்ந்துகொள்வர்.

- **குடும்பத்தின் தங்கி வாழ்வதற்கானதொரு பொதுவான நிதிப் பங்களிப்பு:** இவ்விடயம் தொடர்பிலும் பால்நிலை சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பகிர்ந்துகொள்ளல் காணப்படமாட்டாது இருதரப்பினரும் குடும்பம் தங்கி வாழ்வதற்கானதொரு ஒன்றிணைந்த பங்களிப்பினையே செய்ய வேண்டும். அவர்கள் இருவரும் ஒன்றிணைந்தே குடும்பம் தங்கி வாழ்வதற்கு யார் எவ்வளவு பங்களிப்பு செய்வர் என்பதையிட்டு இணக்கம் காண வேண்டும்.

- **பிள்ளைகள் தொடர்பான ஒன்றிணைந்த பராமரிப்பு:** இரு தரப்பினருக்கும் அவர்களது பிள்ளைகளைப் பராமரிக்கும் கடமை உள்ளது. பிள்ளைகளுக்கு கல்வி வழங்கல் அவர்களை எந்தவொரு ஆபத்து அல்லது அச்சுறுத்தலில் இருந்து பாதுகாத்தல் என்பன இரு வாழ்க்கைத் துணைகளினதும் கடமையாகும்.

- **திருமண வாழ்வில் வன்முறை நிகழ முடியாது:** இரு வாழ்க்கைத் துணைகளும் எவரேனும் ஒருவர் மற்றையவரை தாக்கினால் அல்லது திட்டினால் அவருக்கு அல்லது அவளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படும். கணவன் மனைவிக்கு எதிராக சரீர தண்டனை மேற்கொள்ளக் கூடாது.

- **திருமண பந்தத்தை மீறும் எந்தவொரு வாழ்க்கைத் துணைக்கு எதிராகவேனும் மற்றையவர் நீதிமன்ற பாதுகாப்பை நாட முடியும்:** குறித்தவொரு வாழ்க்கைத் துணைக்கு தமது குடும்பத்தின் உறுப்பினருக்கு உரிய கடப்பாட்டை பூர்த்தி செய்யாவிடின் திருமண பந்தத்துக்கு முக்கியமான விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் உடன்பாட்டிற்கு வர முடியாதெனில் நீதிமன்றம் தலையிடுமாறு அவர்கள் ஒன்றாக அல்லது வெவ்வேறாகக் கோரலாம்.

- **அனைத்து வாழ்க்கைத் துணைகளுக்கும் விவாகரத்து பெறும் உரிமை உண்டு:** சட்டரீதியான திருமணமானது விவாகரத்தின் மூலம் ரத்துசெய்ய முடியும். இருதரப்பு வாழ்க்கைத் துணைகளுக்கும் விவாகரத்து பெறும் தேவை உண்டாயின் ஒன்றிணைந்த மனுவை நீதிமன்றத்திற்கு முன்வைக்கலாம். ஒரு தரப்பு வாழ்க்கைத் துணை விவாகரத்து பெற அவசியமாயின் அவன் அல்லது அவள் தனியாக மனுவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம்.